# மகிழ்ச்சி

MAGIZHCHI
MAGAZINE

JULY & AUGUST
2025

# உடன் நடக்கும் இறைவன்



C.S.I. TAMIL CHURCH SHARJAH
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com
For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 5 |
| திருமறை தியானம் | 6 |
| People of God: The Flock of Christ | 8 |
| இனிய இல்லறம் | 10 |
| Church History | 13 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 16 |
| Kids Corner | 17 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 19 |
| Daily Bible Reading July | 22 |
| Daily Bible Reading August | 23 |
| ஆராதனை தியானப் பொருள் ஜூலை | 24 |
| ஆராதனை தியானப் பொருள் ஆகஸ்ட் | 25 |



# From the Presbyters Desk

அன்பு இறைமக்களே,

நமது ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான திருப்பெயரினாலே அன்பின் வாழ்த்துக்கள்.

நமது “மகிழ்ச்சி” என்னும் இந்த மாதாந்திர இறை நூல் வழியாய் உங்களுடன் தொடர்பு கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஜூன் 2025 முதல் மூன்று ஆண்டுகள் ஐக்கிய அரபு அமீரகத்தின் CSI தமிழ் திருச்சபை ஷார்ஜாவில் திருப்பணி செய்ய அழைத்த மூவொரு இறைவனுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளை உரித்தாக்குகிறேன். மேலும் இந்த வாய்ப்பினை அளித்த தென்னிந்தியத் திருச்சபை சினாட், சென்னைப் பேராயம் மற்றும் CSI தமிழ் திருச்சபை ஷார்ஜா ஆகியவற்றுக்கும் அதன் பொறுப்பாளர்கள் யாவருக்கும் நன்றி செலுத்துகிறேன். மேலும் கடந்த மூன்று ஆண்டுகள் இத்திருச்சபையை மிகச் சிறப்பாக வழி நடத்தி மீண்டும் கோவை திருமண்டலத்தின் தனது சிறப்பான திருப்பணியை தொடர்ந்துள்ள அன்பு ஆயர் அருட்பணி. J.ஜான் ஜெபலின் ஜோஸ் அவர்களுக்கும் ஆயரம்மா, பிள்ளைகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஷார்ஜா CSI தமிழ் திருச்சபையின் வழிபாட்டு முறை, திருப்பணிகள், இறைமக்களின் அன்பும், பொறுப்பாளர்களின் ஒப்படைப்பும் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இங்கு வந்த நாள் அன்று விமான நிலையம் வந்து மலர்க் கொத்துடன் வரவேற்ற செயலர், பொருளர், முன்னாள் செயலர், உடன் ஊழியர், சேகர குழு உறுப்பினர்கள் தொடர்ந்து எல்லா நிலையிலும் உறுதுணையாக உழைத்துக் கொண்டு இருக்கும் ஒவ்வொரு இறைமக்களுக்காக இறைவருக்கு நன்றி படைக்கின்றேன்.

தொடர்ந்து இத்திருச்சபையைத் தூய ஆவியானவரின் வழிநடத்தலிலும், திருமறையின் ஆழ்ந்த சத்தியத்திலும், ஆய்விலும் ஆவிக்குரிய வாழ்வின் முழுமையிலும் நடத்திட எல்லாம் வல்ல இறைவன் அடியானை ஆற்றல்படுத்துவார் என்ற பற்றுருதியில் வேண்டிக்கொள்கிறேன். அப்போஸ்தலர் பவுல் 1 தெசலோனிக்கேயர் 5:24 இல் சொல்வதுப் போல் “உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்”. என்ற வாக்குக்கிணங்க அழைத்த ஆண்டவர் நம்மை தகுதிப்படுத்தி வழிநடத்த வல்லவராய் உள்ளார்.

அன்பு இறைமக்களே தங்களது வாழ்விலும், தங்களது குடும்ப வாழ்விலும் ஆயர் திருப்பணித் தேவைகள் (Pastoral Care), ஆவிகுரியத் தேவைகள் (Spirtual Enrichment), ஜெபங்கள் (Prayers), ஆயர் ஆற்றுப்பணி (Pastoral Counselling) தேவைகள் இருக்குமாயின் நீங்கள் எப்பொழுதும் எங்களை தொடர்பு கொள்ளலாம் நாங்கள குடும்பமாய் திருப்பணி செய்திட ஆயத்தமாக எப்பொழுதும் உள்ளோம். மேலும் இந்த விடுமுறை நாட்களில் குடும்பமாக சிலர் தாயகம் செல்ல ஆயத்தபட்டு இருப்பீர்கள் உங்கள பயண கிருபைகளுக்காக ஆண்டவரிடம் வேண்டிக்கொள்கிறேன். தொடர்ந்து ஆண்டவர் தாமே நம் அனைவரையும், தாயகத்தில் உள்ள நமது உறவுகளையும் பாதுகாத்து வழி நடத்துவராக. **ஆமென்.**

இறைபணியில் உங்கள் ஆயர்
அருள்திரு. A.F.**ஆமோஸ் இலாசரஸ்**
☎ **+971 50 703 2150**
**e-mail : tamilchurchcsisharjah@gmail.com**



# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமான திருச்சபையாரே உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற இன்ப நாமத்தில் வாழ்த்துதலைக் கூறிக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலும் கடந்த ஜூன் மாதம் முழுவதும் நம்மையும் நமது குடும்பங்களையும் பாதுகாத்து போஷித்த ஆண்டவருக்கு நன்றிகளை ஏறெடுத்துக்கொள்கிறேன்.

கடந்த 22.6.2025 அன்று காலை 9.00 மணிக்கு நமது ஆயர் ஆமோஸ் லாசரஸ் அவர்கள் துபாய் விமான நிலையத்தில் கர்த்தருடைய கிருபையால் சுகபத்திரமாக வந்து சேர்ந்தார்கள். அன்று முதல் நமது ஆலயத்தின் ஆராதனைகளை அவர்கள் நடத்தி வருகிறார்கள். இதற்காக ஆண்டவரைத் துதிக்கிறேன். ஆயர் அவர்களின் விசா காரியங்களும் Tenancy contract களும் ஆண்டவருடைய பெரிதான கிருபையால் எளிதே நடைபெற்று முடிந்தது.

ஆயரம்மா மற்றும் ஆயரின் மகள் ஆகிய இருவரின் விசாவுக்காக நாம் முயற்சி செய்து வருகிறோம். கூடிய விரைவில் அவர்கள் இருவருக்கும் விசா கிடைக்கப்பெற்று இந்த தேசத்தில் சுகபத்திரமாய் வந்து சேர்ந்து அய்யாவோட இணைந்து தங்கள் ஊழியங்களை நிறைவேற்ற திருச்சபையார் அனைவரும் ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த 29.6.2025 ஞாயிற்றுக்கிழமை நமது திருச்சபையில் (Church Day) ஆலயதினமாக அனுசரிக்கப்பட்டது. அன்றைய தினம் ஒரு நாள் வருமான காணிக்கை எடுக்கப்பட்டு அது நமது தாயகத்தின் திருச்சபை கட்டுமாண பணிக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

19-ஆவது திருச்சபை நாள் 29.06.2025 அன்று நமது Junior Church பிள்ளைகளுக்கு தேர்வு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து வருகிற ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் Junior Church பிள்ளைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் முதலாம் அல்லது இரண்டாவது வாரம் Junier Church மீண்டும் ஆரம்பிக்கப்படும். அதற்கான அறிவிப்பு வருகிற நாட்களில் கொடுக்கப்படும். இந்த விடுமுறை நாட்களில் தாயகம் சென்று திரும்பி வருஇருக்கிற குடும்பங்களின் பிரயாண காரியங்களுக்காகவும் அவர்கள் சுகப்பத்திரமாக சென்று திரும்பவும் சபையார் அனைவரும் ஜெபித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சபை ஊழியத்தில்
**திரு.சுரேஷ் பிச்சுமணி**
☎ +971566960480



# உடன் நடக்கும் இறைவன்

அன்புடையீர், இறைமகன் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள்!

இந்த ஜூலை மாதத்திற்கென்று நம் ஆண்டவர் அளித்த வாக்குத்தத்தம்

“நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே; ஏனென்றால், நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்”. (யோசுவா 1:9)

கிறிஸ்தவர் ஒருவர் இருந்தார். அவர் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருக்கக் கூடியவர். அவர் தினமும் மாலை கடற்கரையில் நடைப் பயிற்சி செய்வது வழக்கம். அவர் அப்படி நடக்கும் போது மிகுந்த மகிழ்ச்சியுடன் கடவுளைப் போற்றியவாரே நடைப்பயிற்சியில் ஈடுபடுவது வழக்கம். அப்படி அவர் மகிழ்ச்சியுடன் நடக்கும் போது அவரது அருகில் வெறு ஒரு கால்தடம் தெரியும். அதைப் பார்த்ததும் கடவுள் தம்முடன் நடக்கின்றார் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைவார் இன்னும் ஊக்கமாக ஆண்டவரைப் போற்றுவார் அப்படித்தான் ஒருநாள் தம் பணியிடத்தில் ஏற்பட்ட மன உளைச்சலால் மிகுந்த வருத்துடன் அவர் நடக்கத் தொடங்கினார். ஆனால் அன்று வழக்கமாகத் தோன்றும் மற்றோரு கால் தடம் அன்று தெரியவில்லை அதனால் இன்னும் அதிகமாக வேதனையடைந்தார். கடவுளிடம் கேட்டார் “மகிழ்ச்சியான தருணத்தில் என்னுடன் இருந்தீரே ஆண்டவரே ஆனால் நான் இன்று வேதனையில் இருக்கும் வேளையில் என்னை விட்டு விலகிவிடுகின்றீரே இது சரியா ?” என்று வினவினார். அதற்கு கடவுள் அமைதியாக பதில் அளித்தார் நீ பார்க்கும் கால் தடம் உன்னுடையது அல்ல அது என்னுடையது, நீ மகிழ்ச்சியாக இருக்கும் போது உன் அருகில் நின்று பார்கின்றேன் நீ வேதனையில் இருக்கும் போது உன்னைச் சுமந்து செல்கின்றேன் என்றார் இறைவன்.

நமது ஆண்டவர் நம்முடன் நடக்கும் இறைவராக எப்பொழுதும் உள்ளார். இஸ்ரயேலரின் நானுற்று முப்பது ஆண்டுகால எகிப்திய அடிமை வாழ்வைத் திரும்பிப் பார்ப்போம். யாத்திராகமம் 3:7இல் “அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன்,

அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்." என்றார். மேலும் இஸ்ரயேலரின் அடிமை வாழ்வில் அவர்கள் ஆதரவற்று நில்லாமல் நம் இறைவன் அவர்களுடன் பயணமாவதையும் அவர்களை விடுவிக்க கடவுளே மோசே கொண்டு களமிறங்கி அவர்களை மீட்டு அவர்களை தொடர்ந்து வழிநடத்தியதையும் யாத்திராகமம் 13:21 இல் பார்க்கின்றோம் "அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்" அவர்களை மீட்டு ஒவ்வொரு நாளும் வழிநடத்த இறைவன் அவர்களுடன் பயனணமானதை அங்கே பார்க்க முடிகின்றது.

மோசேயை அடுத்து இஸ்ரயேல் மக்களை வழிநடத்தும் பொறுப்பு யோசுவாவிடம் வந்தபோது யோசுவா அந்தப் பொறுப்பினைக் கண்டு அச்சமுற்றார். ஆனால் ஆண்டவர் யோசுவாவிடம் நம்பிக்கையின் வாக்கை அளிக்கின்றார் "நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்". (யோசுவா 1:9) அதே போல் ஆண்டவரும் எல்லா நிலையிலும் இருந்து வழி நடத்தினார். இன்றும் நமது சூழல்கள், பொறுப்புகள், தேவைகளைக் கண்டு அஞ்சி மனவேதனையில் இருப்போமென்றால் மோசேயுடனும் , யோசுவாவுடனும் இருந்த அதே ஆண்டவர் நம்முடனும் உள்ளார். அவர் நம்மை வழிநடத்த வல்லவராக இருக்கின்றார்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவுக்குப் பல பெயர்கள் உள்ளன. மத்தேயு 1:23 இல் வரும் பிறப்புப் பறாறிய நிகழ்ச்சியுரையில் "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம்." இயேசு கிறிஸ்துவுக்கு கொடுக்கபட்ட மற்றொரு பொருத்தமான பெயர் "இம்மானுவேல்" ஆண்டவர் என்றும் நம்முடன் உள்ளார். எனவே கலங்க வேண்டாம் திகைக்க வேண்டாம் அவரை மட்டுமே நம்புவோம். அவர் ஒருபோதும் கைவிட மாட்டார்.

"No matter what you're going through, you are not alone. God is with you."

Even when you walk in the path of troubles and frustrations fear not because you are not alone God is With You.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# PEOPLE OF GOD: THE FLOCK OF CHRIST

In the Bible, the Church is often called the "People of God" and the "Flock of Christ." These are not just nice words they show us important truths about who we are, who we belong to, and what our purpose is. As God's people, we are chosen and loved. As Christ's flock, we are led and cared for by Jesus, our Good Shepherd. These images help us understand that we are part of God's family and called to live for Him together.

The term "People of God" highlights a relationship rooted in divine calling and covenant. In the Old Testament, God chose Israel to be His special possession:

"I will take you as my own people, and I will be your God." Exodus 6:7

This covenant identity was extended in the New Testament to all who believe in Christ, both Jews and Gentiles.

The Apostle Peter writes: "But you are a chosen people, a royal priesthood, a holy nation, God's special possession, that you may declare

the praises of him who called you out of darkness into his wonderful light."1 Peter 2:9. This reveals that being the People of God is not about ethnicity or lineage, but faith and grace.

Jesus often described His followers as sheep and Himself as the Good Shepherd. This imagery conveys tenderness, guidance, and protection: "I am the good shepherd. The good shepherd lays down his life for the sheep. "John 10:11. Christ's love is not passive. He actively seeks, feeds, and defends His flock. He knows each sheep by name and calls them to follow Him: "My sheep listen to my voice; I know them, and they follow me." John 10:27. Being part of the flock means belonging to a spiritual family a unified body under one Lord.

There is one body and one Spirit. One Lord, one faith, one baptism; one God and Father of all." Ephesians 4:4–6 (NIV)As the flock of Christ, the Church is not a mere collection of individuals, but a united people bound by love and truth, committed to mutual care. As God's people and Christ's flock, we are called to a life of holiness, love, and witness: "Live such good lives among the pagans that… they may see your good deeds and glorify God."1 Peter 2:12. This identity is not passive—it demands action: to serve, to proclaim the Gospel, and to reflect the character of our Shepherd.

To be called the People of God and the Flock of Christ is a privilege and a responsibility. It reminds us that we are loved, led, and sent. Under the care of the Good Shepherd, we are safe, known, and empowered to bring light to the world. As we journey together in faith, let us listen to His voice and follow Him faithfully.

"For you were like sheep going astray, but now you have returned to the Shepherd and Overseer of your souls."1 Peter 2:25

Contributed by
Mrs.Nancy Augustine



# பெற்றோருக்குச் சில ஆலோசனைகள்

**பிதாக்களே, ...கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை** (உங்கள் பிள்ளைகளை) **வளர்ப்பீர்களாக.** (எபேசியர் 6:4).

இன்றைய பிள்ளைகள் தடுமாறித் தடந்தவறிச் செல்லச் செய்யும் தடைக்கற்கள் இன்று ஏராளம். ஆகவே, இன்றைய இளைய தலைமுறை யினரை வளர்த்துக்கொண்டிருக்கும் பெற்றோர்களுக்குப் பொறுப்புகளும் மிக அதிகம். கண்டிப்புடன்கூடிய கவனம் மிக அவசியம்.

இன்றைய வாலிபர்களுக்கு, இதற்கு முன்பு வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, சுயக் கட்டுப்பாடு அல்லது இச்சையடக்கம் அதிகமாகத் தேவைப்படுகிறது. இந்த ஆபத்தான நாட்களில் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்தவக் குழந்தைகள் தொலைந்து போகாமலிருக்க, ஆழமான விசுவாச வாழ்க்கைக்கு அவர்களை அறிமுகப்படுத்திப் பயிற்றுவிப்பது திருச்சபையின் மீதும், பெற்றோர்கள் மீதும் விழுந்த கடமையாக இருக்கிறது.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய பல்வேறு பத்துக் கடமைகளை உங்களுக்கு ஆலோசனையாக இங்கே கூறியுள்ளேன். இதைவிட அதிகமான கடமைகளைக் கடைப்பிடித்து வருவீர்களானால் மிகுந்த மகிழ்ச்சியே.

## 1. எடுத்துக்காட்டாய் இருங்கள்

உங்களை உங்கள் பிள்ளைகள் பின்பற்றத்தக்கதாக சிறந்த முன்மாதிரியாக இருங்கள். உங்கள் பிள்ளைகள் எதைச் செய்யக் கூடாது என்று கருதுகிறீர்களோ,

அதை நீங்கள் செய்யாதீர்கள். (Be a Role-Model to your Children; be an example to your Children. Don't do the thing, what you wish your children must not do). பிள்ளைகள் செய்யக்கூடாது என்று கருதும் தவறை நீங்கள் செய்தால், அவர்கள் தவறு செய்யும்பொழுது அவர்களைக் கண்டிக்கும் உரிமையை நீங்கள் இழந்துபோவீர்கள். இதற்கு எடுத்துக்காட்டாகத் தாவீதைக் கூறலாம்.

கர்த்தரின் இதயத்திற்கு உகந்த மனிதனாகத் தாவீது இருந்தும், தன்னுடைய பாவச் செயல்களின் விளைவாய்ப் பிள்ளைகளைக் கண்டிக்கும் உரிமையை இழந்துபோனார். "பட்டயம் என்றென்றும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும் .. உன் கண்கள் பார்க்க .. உன் ஸ்திரீகள் .. கற்பழிக்கப்படுவார்கள்" என்ற சாபங்களையும் பெற்றார் (2 சாமு.12:10). அவருக்குக் கூறப்பட்ட சாபங்கள் அப்படியே நிறைவேறியதல்லா? அரசனாக இருந்தாலும் ஒரு தகப்பனாக, தாவீது தோல்வியையே தழுவினார்.

உங்கள் பிள்ளைகள் எப்படி இருக்கவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களோஅப்படியே நீங்களும் இருங்கள். உங்கள் பிள்ளைகள் உங்களைப் பின்பற்றத்தக்க வகையிலே உங்கள் நடக்கை இருக்கட்டும். பிள்ளைகளுக்கு எவற்றைக் கற்றுத் தருகிறீர்களோ, அவற்றின்படி நடக்க நீங்களும் கவனமுள்ளவர்களாக இருப்பது அவசியம் (It's important for parents to live the same things they teach).

இல்லம்தான் பிள்ளைகளின் முதலாவது "மழலையர் பள்ளி (Nursery). பெற்றோர்கள்தான் பிள்ளைகளின் முதல் உலகம். நீங்கள்தான் அவர்களை உலகிற்கு அறிமுகப்படுத்துகிறீர்கள்; கடவுளையும் அறிமுகப்படுத்து கிறவர்கள் நீங்களே. ஆகையால் ஔவையார், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறுகிறார்.

குழந்தைகள் பார்த்தும், உணர்ந்துமே முதலாவது கற்கத் துவங்குகிறார்கள்; ஆகையால் வீட்டிலுள்ள உங்களுடைய மொழியையும், உங்களுடைய பழக்கவழக்கங்களையும், உங்களுடைய நடத்தையையும், உங்களுடைய குணத்தையுமே பிள்ளைகள் முதலாவது கற்கத் துவங்குகிறார்கள்.

பெற்றோர்கள் இருவரிடையேயும் உண்மையான அன்பு நிலவ வேண்டும்; அவர்களிடையே ஒற்றுமையும் புரிந்துகொள்ளுதலும் இருக்கவேண்டும். பெற்றோர்களிடையே நிலவும் அன்புதான் குழந்தை களுக்குப் பெற்றோர்கள் தரக்கூடிய மிகச் சிறந்த வெகுமதியாகும். (The best gift the parents can give their children to love themselves).

**2. நண்பர்களாக இருங்கள்.**

இளைஞர்கள் அல்லது இளைஞிகள் தங்களுடைய பெற்றோர் களைவிடத்

தங்களுடைய நண்பர்களின் வார்த்தைகளுக்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிப்பார்கள் அதிகம் நம்புவார்கள். ஆனால், ஒரு குழந்தையின் வாழ்க்கையில் முதல் நண்பர்கள் பெற்றோர்கள் தான். நாளாவட்டத்தில் அந்த நட்பு மறைந்து போகிறது. நீங்கள் ஏன் உங்கள் பிள்ளைகளுடைய நண்பர்களாகத் தொடர்ந்து இருக்கக் கூடாது?

## 3. பிள்ளைகளின் நம்பிக்கைக்குரியவர்களாக இருங்கள்

நீங்கள் சொல்லும் சொல்லின்படி நடக்கும் மனிதனாக மனுஷியாக இருப்பதில் கவனமாக இருங்கள் (Be a man or woman of your words) உங்கள் வார்த்தையில் உண்மையுள்ளவர்களாக இல்லாவிட்டால். பிள்ளைகளின் நம்பிக்கையை இழந்துவிடுவீர்கள், சொல்வதொன்றும் செய்வதொன்றுமாக இருக்காதீர்கள்.

பிள்ளைகளிடம் உண்மையான அன்பு செலுத்துங்கள். மனைவி தன் கணவனுக்கு எதிராகவும், கணவன் மனைவிக்கு எதிராகவும். பிள்ளைகளைத் திருப்புவதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக் காகவோ அவர்களைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள்.

பிள்ளைகளின் நம்பிக்கையைப் பெற்ற பெற்றோர்களாக இருங்கள். அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருந்தால்தான், அவர்கள் தங்களுடைய இரகசியங்களையும் பலவீனங்களையும் உங்களிடம் பகிர்ந்து கொள்வார்கள். அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளின்போது நிலைமை கைவிட்டுக் கடந்துபோகுமுன் சரியான நேரத்தில் சரியான ஆலோசனைகளை உங்களால் வழங்க முடியும்.

## 4. உற்சாகப்படுத்துங்கள்

பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள் நம்பிக்கையூட்டுங்கள் (Encourage them and Motivate them). அவர்களுடைய பலவீனங்களைச் சீர் செய்யுங்கள். அவர்களுடைய பலத்தை அவர்களுக்கு வெளிப் படுத்துங்கள். வகுப்பில் அதிக மதிப்பெண்களைப் பெற்றவர்கள்தான் வாழ்க்கையில் வெற்றிபெறுவார்கள் அல்லது முன்னேறுவார்கள் என்பது தவறான கணக்கு.

உலகில் சாதனை புரிந்தவர்கள் பலர் சாதாரணமான மாணவர்களாக இருந்தவர்கள்தான் (Average or Less than average students). வாழ்க்கையில் முன்னேறவேண்டும் அல்லது சாதிக்க வேண்டும் என்ற வைராக்கியம் உள்ளவர்கள்தான் சாதித்திருக்கிறார்கள். பள்ளியில் முதல் மதிப்பெண்கள் பெற்றவர்களெல்லாம் சாதனையாளராக மாறவில்லை என்பதுதான் உண்மை. பிள்ளைகளுக்குத் தைரியத்தையும், உழைப்பின் சிறப்பையும், பிரச்சனைகளை எதிர்த்துப் போராடும் குணத்தையும் கற்றுக்கொடுங்கள்.



# நற்செய்தி பரப்பும் சங்கம் (S.P.G)

இது கடவுளின் அழைப்பென்பதில் யாருக்கும் ஐயப்பாடில்லை. ஆயினும் பாளையங்கோட்டையில் அச்சமயத்தில் ஆயர் எவருமில்லை. அப்போது சத்தியநாதன் ஓய்வு பெற்றுவிட்டிருந்தார். S.P.C.K. மிஷனெரி, எவரும் அவரிடத்தில் அமர்த்தப்படவில்லை. எனவே அங்கு மிஷனெரி வரும்வரை ரிங்கல்தோபே பாளைங்கோட்டையைத் தலைமையிடமாகக் கொள்ளவேண்டுமெனத் தீர்மானம் செய்யப்பட்டது. திருநெல்வேலியைச் சார்ந்த பணித்தளங்களை மேற்பார்வையிடுவதோடு, மலைகளைக் கடந்து, திருவிதாங்கூரில் பணி தொடங்கவேண்டியிருந்தது. தரங்கம்பாடியைவிட்டுத் தூத்துக்குடிக்குப் படகில் கடற்பயணம் செய்தார். அங்கிருந்து பல்லக்கில் பாளையங்கோட்டைக்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

மூன்றாண்டுக் காலத்திற்கு அங்குள்ள அனைத்துச் சபைகளையும் சந்திக்கத்தொடர்ந்துபயணங்கள்மேற்கொண்டார். சிலவேளைகளில், ஒரு ஊரிலிருந்து அடுத்த ஊருக்கு நடந்தே செல்வார். வேறு சில சமயங்களில் போர்ச்சுக்கீசிய வணிகர் அளித்த குதிரைமீதும் ஏறிச்செல்வார். இயன்றபோதெல்லாம் திருவிதாங்கூருக்கும் அதற்கப்பாலுள்ள

கொச்சிக்கும் சென்று வருவார். தமது முதலாம் பயணத்தின் போது 1806 ஏப்ரல் மாதம் 25ஆம் நாளில் தமது நாட்குறிப்பேட்டில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்: “அதிகாலையில் புறப்பட்டு நண்பகல் வேளையில் ஆராம்பொழி (Aramboli) மலைத்தொடரில் உள்ள கணவாயைக் கடந்து சென்றோம்.. அங்குக் கண்ட காட்சியை என்னனென்று கூறுவேன். பசுமையான மரங்கள் நிறைந்த உயர்ந்த மலைச் சிகரங்கள், முகில் தவழும் மலையுச்சிக் கோட்டைகள், கோயில்கள் அழகுற அமைந்து கண்ணுக்கு விருந்தளிக்கும் காட்சி என்னுடன் வந்தவர்களோ கோழைகள் நடுங்கிக்கொண்டே ஒவ்வோர் அடியையும் எடுத்து வைத்தனர். கிறிஸ்தவர்களைத் தங்களுடைய கொடும் பகைவர்களாகக் கருதும் பிராமணர் ஆதிக்கத்திலிருந்த பகுதி அது ஆகும்.”

மலைத் தொடரின் மீதிருந்து திருவிதாங்கூரைக் கண்ணோக்கினார். அருட்பணிக்கு அதுவரை அங்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. வணிக நிறுவனங்களுக்கு அடிமையாகாமல் குறுநில மன்னர்




ஒருவரால் ஆளப்பட்டு வந்தது. வடக்குத் திருவிதாங்கூரில் ஏற்கெனவே கத்தோலிக்கரும், சிரியன் ஆர்த்தோடாக்ஸ் கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வந்தபோதிலும் புராட்டஸ்டண்ட் திருச்சபையின் மிஷனெரி ஒருவரின் வருகை முதன் முறையாக இப்போது தான் நிகழ்ந்தது.

## ரிஷியான ரிங்கல்தோபே

S.P.C.K.பாளையங்கோட்டைக்கு மிஷனெரி ஒருவரை நியமித்தது. உடனடியாக ரிங்கல்தோபே மைலாடிக்குச் சென்றார். அங்கு ஒரு மண்குடிசையில் தங்கினார். தமது சகோதரிக்கு எழுதிய கடிதத்தில் தமது குடிசையில் உடைந்துபோன நான்கு நாற்காலிகள், இரண்டு நார்கட்டில்கள், துணிகளைப் போட கொடிக் கயிறு, நூல்களை அடுக்கி வைக்க இரு நிலைத்தட்டுகள், இரு மேசைகள், ஒரு எண்ணெய் விளக்கு இருந்தனவென்று குறிப்பிட்டிருக்கின்றார். ஒரு பெட்டியில் மீதியான உடைகள், நூல்கள், தாள்கள் போன்றவை வைக்கப்பட்டன.

ரிங்கல்தோபே உயரமானவர்; ஒல்லியான உடலமைப்புள்ளவர்; உடைகளைப் பற்றிக் கவலையில்லாதவர். பழைய சட்டையும், காற்சட்டையும், பிய்ந்துபோன பழையதோர் நார்தொப்பியும் அணிந்திருப்பார். இவருக்கு யாராவது மேலுடை ஒன்றை வழங்கினால் தன்னைவிட அதிகத் தேவையிலுள்ளவருக்கு அதைக் கொடுத்துவிடுவார். பணத்தைப் பற்றிய கவலையும் இவருக்கிருந்ததில்லை. காலாண்டுக்கொருமுறை ஊதியம் பெற்று, தமது கடன்களையெல்லாம் அடைத்து விடுவார். மீதிப் பணமிருந்தால் வறியோருக்கு வழங்கிடுவார். ஒரு ரூபாய்க்குக் குறைவாக எவருக்கும் அவர் கொடுத்ததில்லை. இரண்டு நூற்றாண்டுகட்கு முன் ஒரு ரூபாயின் மதிப்பு மிகமிக அதிகமாக இருக்குமல்லவா?

மைலாடிக்கு முதன் முறையாக வந்தபோது நாற்பதுபேர் மட்டுமே திருமுழுக்குப் பெற ஆயத்தமாக இருந்தனர் என்பதை அறிந்தார். இவரது அரும்பணியால் பல கிராமங்களில் கிறிஸ்தவ சபைகள் உருவாகி வளர்ச்சியடைந்தன. சபைகளை ஒழுங்காய்ப் பார்வையிட்டார். சில கிராமங்களில் பள்ளிக்கூடங்களைத் தொடங்கினார். அவற்றில் பணிபுரிய ஆசிரியர்களைப் பயிற்றுவித்தார். ஆறாண்டுக் காலத்திற்குள் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர் களுக்குத் திருமுழுக்களித்தார்.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

சங்கீதம் 136 - 150

1. நம் வாழ்க்கையின் 'பாபிலோன்' என்பது எது?
2. தீமைக்கு பதில் எப்படிக் கொடுக்க வேண்டும்?
3. உங்கள் பிள்ளைகளின் வாழ்வில் நீங்கள் என்ன வகைத் தூணாக இருக்க விரும்புகிறீர்கள்?
4. தேவன் யாரை சிகிச்சை செய்கிறார்?
5. சியோனை மறப்பது யாருக்குத் துன்பம் தரும்?
6. நீதியைக் கொண்டு தேவன் என்ன செய்ய மாட்டார்?
7. அவரை நம்புகிறவர் யார்?
8. யார் யார் தேவனைப் புகழவேண்டும்?
9. யார் யார் தேவனைப் புகழவேண்டாம்?
10. தேவனைப் புகழ ஏற்றமான இடம் எது?

கடந்த ஜூன் மாதம் கேள்விகளுக்குப் பதிலளித்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Benil Darwin
2. Mrs.Stella Jashwanth
3. Mrs.Kavitha Johnson
4. Mrs.Ruby Jeyaseelan
5. Mrs.Sylvia Sekar
6. Mrs Thangamani Anbalagan
7. Mrs.Rubavathy
8. Mrs.Jone Bino
9. Mrs.Baby Jesudass
10. Mrs Kavitha Rasu
11. Mrs.Punitha Arul
12. Mrs.Selina Stephen
13. Mrs. Ahiya
14. Mrs. Ahia

**Children's Corner Colouring**

1. Jefin
2. Jafan
3. San Hedrin



# GOD WHO JOURNEYS WITH US

## God Who Journeys With Us

Have you ever gone on a trip with your family-like a vacation, a visit to a friend's house, or even a walk through your neighborhood? You're not alone on these trips-someone is always with you, helping you find the way, keeping you safe. In life too, we're all on a journey-and the good news is: God always walks with us!



## God Walked with Abraham

God once told a man named Abraham to leave his home and go to a land he had never seen. That sounds a little scary, right? But Abraham trusted God and started walking. God promised, "I will bless you... and you will be a blessing" (Genesis 12:2). Abraham didn't have a map or GPS-he only had God's voice and His promise. Even when the journey was hard, God kept His promise and never left Abraham alone.

## God Journeyed with Moses and the Israelites

Remember Moses? He led the people of Israel out of Egypt. They were slaves, but God set them free! Their journey through the desert was tough-hot sun, no water, and no food. But God showed He was with them every single step.

* A cloud led them by day, and fire by night (Exodus 13:21).
* God gave them manna from heaven when they were hungry (Exodus 16:4).
* He made water flow from a rock when they were thirsty (Exodus 17:6).



God didn't just say "Good luck!" and leave-they saw His presence every day!

## Paul's Adventure With God



Another man named Paul went on many long trips to tell people about Jesus. He faced storms, shipwrecks, and even jail-but never gave up because he knew God was always with him. Paul wrote, "The Lord stood at my side and gave me strength." (2 Timothy 4:17)

# What About You?

Maybe you're starting a new school year, moving to a new place, or learning something hard. Sometimes we feel afraid or lonely. But remember-God is right there with you, just like He was with the Israelites, He's there when you're playing, studying, laughing, and even when you're crying. Never forget: You are never alone on your journey. God is walking right beside you-step by step, day by day.

Find the hidden words that remind us of God's journey with His people. Words can go across, down, diagonal, or backward.

**Words to Find:**

ABRAHAM, PROMISE, JOURNEY, MOSES, DESERT, MANNA, PAUL, JESUS, STRENGTH, ROCK, BLESSING, NEVERALONE

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| N | E | V | E | R | A | L | O | N | E | A |
| P | M | J | O | U | R | N | E | Y | B | B |
| R | O | C | K | N | N | O | M | C | R | R |
| O | A | M | A | N | N | A | E | L | A | A |
| M | L | M | O | S | E | S | S | H | H | H |
| I | E | P | A | U | L | N | T | S | A | A |
| S | S | T | R | E | N | G | T | H | M | M |
| E | S | D | E | S | E | R | T | I | A | A |
| B | L | E | S | S | I | N | G | S | F | A |
| J | E | S | U | S | G | K | L | B | R | M |

Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this Month. +971 50 703 2150

*Contributed By*
**Sathish Rajkumar**

## Birthday & Wedding day Celebrants

**1st July**
MRS JULIE JEYANTHI
**2nd July**
MRS KOHILA RANI V.
MRS REENA PUSHPARANI SURESH S.
MRS STELLA RUBI JASHWANTH
**3rd July**
MR FRANKLIN LIGHTEN
MR SARAVANA KUMAR
MISS SHYNO
**4th July**
MRS PRIYA DANIEL
**6th July**
MASTER BEBIN ANTO J.
**7th July**
MASTER GAWARGIOUS DANIEL
MASTER STEVE JACKSON
**10th July**
MR BIJU NAYAGAM K.P.M.
MRS IRENE JENILA
MR GNANARAJ
**12th July**
MR JESU DASAN K.
MR GURU PRASAD
MRS DINO.S
MRS P.HEPHZIBAH CHRISTABEL
**13th July**
MR RATHNA SINGH JULIUS S.
MR J YESU RAJAN
**14th July**
MASTER JEBASTON JOSEPH J.
MRS JULIE.S
**15th July**
MRS J.RUBY FATHIMA SEELAN
MR KINGSLIN T. (AJMAN)
MISS JENICA PAULINE
**16th July**
MR G.ARUN JEBASTIN
**18th July**
MISS JONICA ELIZABETH
MRS CHRISTINA DAFFI
**19th July**
MRS DIVINA PREM K.
**20th July**
MR DANIEL J.S.
MR AMAR VENKATACHALAM
**22th July**
MR Richard sathish Kumar
**24th July**
MRS NANCY AUGUSTINE
MR LAWRANCE N.
MR ASHOK KUMAR.D
**25th July**
MASTER ADRIAN NICHOLAS SATHIYA
**27th July**
MISS SHABHRINA HAZEL M.
**28th July**
MASTER THIVAKAR KINGSTON
MISS YAMIKA
**29th July**
MR BROWN VIJAY KUMAR T.
MISS J.JENESSA
**30th July**
MR ANISH C.

## Wedding Anniversary

**3rd July**
MR & MRS SURESH D.
**10th July**
MR & MRS ROBERT
**11th July**
MR & MRS JOSH ASHWINE
**13th July**
MR & MRS JESU DASAN K.
**14th July**
MR & MRS PRASHANTH J.
MR & MRS GNANARAJ
**19th July**
MR & MRS BROWN VIJAY KUMAR T.
**28th July**
MR & MRS SUNDARA RAJAN R.

# Birthday & Wedding day Celebrants

**1st August**
MASTER. JUAN SAMUEL.M
MISS. JOANNA SAHRON

**2nd August**
MRS. S.D.AHATHA SUMI

**3rd August**
MISS. CHRISTINA MEKALA
MASTER. H.ARWIN DERICK

**4th August**
MR. HENRY VASANTH KUMAR S.
MASTER. JOSIAH BERNARD SAMUEL
MASTER. JOSHWIN CHRISTO

**5th August**
MRS. SUGANTHI.J
MRS. VEERANI SARAVANAKUMAR
MISS. JOSEPHIN GIFTA
MRS. SELINA
MR. UTHAYA NAMBI

**6th August**
MISS. MOUSHMIABISHA
MR. NIRMAL RAJKUMAR

**7th August**
MRS. ANGELINE

**8th August**
MR. DAVID A. (NEELAX)
MISS. JIREHLYN PAULA JOHIN

**9th August**
MASTER. MISHEL GERSOME DANIEL

**10th August**
MASTER. BRAYDEN JEROME
MR. S.SIMEYON
MISS. ZOEY FLORES

**11th August**
MR. ANANTHA RAJ

**12th August**
MRS. HANNAH SUMITHA
MASTER. SHAUN OLIVER

**13th August**
MR. YOVAN MAHENDRAN

**14th August**
MISS. SARAH SARAVANAKUMAR

**15th August**
MR. SAMUEL SATHIYA
MRS. PREMA ABRAHAM K.
MRS. ANITA JULIET BROWN
MISS. EVELYN MICHELLE

**17th August**
MRS. SUSI VASANTHA KIRUBAI BASKARAN

**18th August**
MR. MATTHEW

**19th August**
MISS. ASENATH JANE
MISS. CATHERINE NARGUNAM
MRS. SUBHA

**20th August**
MR. JASPER JOHN PAUL P.
MASTER. JASON PRESLEY
MISS. DINAH SHINY
MISS. DANIELA
MISS. JISSA JONAS

**23th August**
MASTER. LIAM JOHN

**25th August**
MR. RAJESH MANIRAJ
MRS. SINDUJA

**27th August**
MASTER. JERRINE J.
MR. SURESH D.

**28th August**
MISS. SHIRLEY.S

**29th August**
MRS. KIRUBA PRIYADHARSHINI.M
MR. JACOB SAMUEL

**31st August**
MASTER. JEROME SAMSON P.
MISS. JERUSHA.R
MRS. J.THUKILAJA

## Wedding Anniversary

**8th August**

MR. WILLIAMS PRABHAKARAN & MRS. EBSIBA

**18th August**

MR. BIJU NAYAGAM K.P.M. & MRS. NIJA M.

**20th August**

MR. DAVID PRAKASH GNANIAH & MRS. FELISHA JANE

MR. JEBAS JEBARAJ & MRS. ANCY RAJLIN

**22th August**

MR. JOSHUA VENUGOPAL E. & MRS. MADONA ANBAZHAGAN

**23rd August**

MR. THANASEKAR & MRS. RADHIKA SEKAR

**29th August**

MR. LIVINGSTON RAJKUMAR. J & MRS. JUDITH SHINY. J

# DAILY BIBLE READING JULY 2025

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 TUE | ஆதியாகமம் 28:10-22 | மத்தேயு 28:16-20 |
| 02 WED | ஆதியாகமம் 20:1 -25 | மாற்கு 16:1-16 |
| 03 THUR | யாத்திராகமம் 3:1 -12 | லூக்கா 24:13-35 |
| 04 FRI | ஏசாயா 41: 1-20 | யோவான் 14:1-6 |
| 05 SAT | எரேமியா 1: 1- 14 | அப்போஸ்தலர் 18:1-10 |
| 06 SUN | செப்பனியா 3:14-20 | ரோமர் 8:1-11 |
| 07 MON | யோசுவா 1:1- 18 | பிலிப்பியர் 1:1-11 |
| 08 TUE | யோசுவா 3:1 - 17 | யோவான் 16:1 -13 |
| 09 WED | உபாகமம் 31 :1-8 | 1 கொரிந்தியர் 10:1-13 |
| 10 THUR | சங்கீதம் 23 | 2 கொரிந்தியர் 4:1-10 |
| 11 FRI | சங்கீதம் 139 | எபிரேயர் 13:1 -3 |
| 12 SAT | சங்கீதம் 46 | மத்தேயு 1:1-23 |
| 13 SUN | மீகா 6:1-16 | மத்தேயு 18:1-20 |
| 14 MON | சங்கீதம் 91 | ரோமர் 8: 31-39 |
| 15 TUE | ஏசாயா 43:1-7 | எபேசியர் 3:14-21 |
| 16 WED | சங்கீதம் 32 | எபிரேயர் 4:1-16 |
| 17 THUR | ஏசாயா 58:1- 11 | யாக்கோபு 4:1-8 |
| 18 FRI | புலம்பல் 3:1-23 | யோவான் 10:1-28 |
| 19 SAT | ஏசாயா 42:1-16 | 1 தெசலோனிக்கேயர் 5:1-24 |
| 20 SUN | நீதிமொழிகள் 3:1 - 12 | 2 தீமோத்தேயு 1:1 - 7 |
| 21 MON | சங்கீதம் 37 | பிலிப்பியர் 4:1-7 |
| 22 TUE | ஏசாயா 30:1- 26 | 1 பேதுரு 5:1-7 |
| 23 WED | சங்கீதம் 121 | வெளிப்படுத்துதல் 21:1-8 |
| 24 THUR | யாத்திராகமம் 13:1 - 22 | கொலேசெயர் 1:1-17 |
| 25 FRI | ஆதியாகமம் 5: 1 - 24 | யோவான் 8:1-12 |
| 26 SAT | ஆதியாகமம் 6:1- 9 | எபேசியர் 2:1-10 |
| 27 SUN | யாத்திராகமம் 33:1-14 | 1 யோவான் 4:7-21 |
| 28 MON | எண்ணாகமம் 14:1-14 | 2 பேதுரு 3:1-18 |
| 29 TUE | உபாகமும் 2:1-25 | லூக்கா 24:1-15 |
| 30 WED | ஆமோஸ் 3:1-15 | 2 கொரிந்தியர் 12:1-9 |
| 31 THUR | ஆதியாகமம் 12 :1 - 20 | கலாத்தியர் 2:1-20 |

## DAILY BIBLE READING AUGUST 2025

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 FRI | யோவான் 8:31-47 | ரோமர் 6:1-14 |
| 02 SAT | கலாத்தியர் 5:1-15 | ரோமர் 8:1-7 |
| 03 SUN | 2 கொரிந்தியர் 3:1-18 | கொலேசேயர் 2:6-23 |
| 04 MON | ஏசாயா 61:1-11 | லூக்கா 4: 14-30 |
| 05 TUE | யாத்திரகமம் 14:1-31 | யாத்திராகம் 15:1-81 |
| 06 WED | சங்கீதம் 107:1-22 | சங்கீதம் 107:23-43 |
| 07 THUR | ரோமர் 3:1-21 | ரோமர் 7:1-25 |
| 08 FRI | யோவான் 10:1-21 | யோவான் 10:22-42 |
| 09 SAT | அப்போஸ்தலர் 12:1-25 | அப்போஸ்தலர் 16:16-40 |
| 10 SUN | சங்கீதம் 18:1-29 | சங்கீதம் 18:30-50 |
| 11 MON | ஏசாயா 43:1-21 | ஏசாயா 44:1-28 |
| 12 TUE | உபாகமம் 30:1-20 | யோசுவா 24:1-28 |
| 13 WED | நெகேமியா 9:1-31 | நெகேமியா 9:32-38 |
| 14 THUR | மத்தேயு 11:1-30 | மத்தேயு 12:1-21 |
| 15 FRI | லேவியராகவும் 25:8-26 | லேவியராகமம் 25:25-53 |
| 16 SAT | எரேமியா 34:8-22 | எரேமியா 31:1-30 |
| 17 SUN | எசேக்கியேல் 36:16-38 | எசேக்கியேல் 37:1-28 |
| 18 MON | சங்கீதம் 34:1-22 | சங்கீதம் 40:1-17 |
| 19 TUE | கலாத்தியர் 3:1-29 | கலாத்தியர் 1:31-21 |
| 20 WED | எபேசியர் 2:1-22 | எபேசியர் 3:1-21 |
| 21 THUR | எவ்விரேயர் 2:1-18 | எபிரெயர் 4:1-16 |
| 22 FRI | வெளிப்படுத்தல் 1:1-20 | வெளிப்படுத்தல் 5:1-14 |
| 23 SAT | லூக்கா 13:1-21 | லூக்கா 15:1-32 |
| 24 SUN | 1 சாமுவேல் 17:1-58 | 1 சாமுவேல் 18:1-30 |
| 25 MON | தானியேல் 3:1-30 | தானியேல் 6:1-28 |
| 26 TUE | சகரியா 9:9-17 | சகரியா 10:1-12 |
| 27 WED | அப்போஸ்தலர் 13:1-52 | அப்போஸ்தலர் 14:1-28 |
| 28 THUR | தீத்து 2:1-15 | தீத்து 3:1-15 |
| 29 FRI | சங்கீதம் 146:1-10 | சங்கீதம் 147:1-20 |
| 30 SAT | ஏசாயா 19:1-26 | ஏசாயா 52:1-15 |
| 31 SUN | வெளிப்படுத்தல் 21:1-27 | வெளிப்படுத்தல் 22:1-21 |

# ஆராதனை தியானப் பொருள்

## ஜுலை- 2025

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>July-6<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 13:8-18<br>2 கொரிந்தியர் 8:1-15<br>மாற்கு 14:3-11<br>சங்கீதம் 15 | Stewardship Sunday<br>இழப்பை எண்ணாத ஈதல்<br>Giving without Counting the Cost |
| ஞாயிறு<br>July-13<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | யோசுவா 4:1-9<br>1 திமோதேயு 6:11-16<br>மத்தேயு 13:1-9<br>சங்கீதம் 1 | Theological Education Sunday<br>இறையியல் கல்வி:<br>பற்றாளரை உருவாக்கல்<br>Theological Education: Making of the Faithful |
| ஞாயிறு<br>July-20<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 35:1-15<br>அப்போஸ்தலர் 16:11-15<br>யோவான் 10:1-6<br>சங்கீதம் 95 | இறைமக்கள் : கிறிஸ்துவின் மந்தை<br>People of God: Flock of Christ |
| ஞாயிறு<br>July-27<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | யாத்திராகமம் 29:1-9<br>எபேசியர் 5:1-14<br>லூக்கா 10:1-11<br>சங்கீதம் 99 | அருட்பொழிவு திருப்பணி :<br>கிறிஸ்துவின் நறுமணம்<br>Ordained Ministry: Fragrance of Christ |

# ஆராதனை தியானப் பொருள்
## ஆகஸ்ட்- 2025

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>August-3<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | 1 இராஜா. 17:1-16<br>கலாத்தியர் 2:1-10<br>மத்தேயு 13:47-52<br>சங்கீதம் 107:1-15 | Mission Sunday<br>அருட்பணி : எங்கிருந்தும் எவ்விடத்தும்<br>Mission: From Everywhere to Everywhere |
| ஞாயிறு<br>August-10<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 29:1-20<br>எபிரெயர் 13:1-6<br>மத்தேயு 19:3-9<br>சங்கீதம் 128 | திருமணம் : நிலைபெறும் அன்பின் வாழ்வு<br>Marriage: Lasting Life of Love |
| ஞாயிறு<br>August-17<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 8:1-14<br>கொலோசெயர் 3:1-11<br>யோவான் 3:1-8<br>சங்கீதம் 25 | திருமுழுக்கு : மறுபடியும் பிறத்தல்<br>Baptism: Born from Above |
| ஞாயிறு<br>August-24<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | மீகா 6:1-8<br>கலாத்தியர் 3:18-29<br>லூக்கா 4:16-21<br>சங்கீதம் 113:1-9 | Dalit & Adivasi Sunday<br>உருவிழந்த சமூகங்களின் இறைவடிவத்தை மீட்டெடுத்தல்<br>Restoring the Image of God in Distorted Communities |
| ஞாயிறு<br>August-31<br>2025 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | யாத்திராகமம் 12:1-14<br>1 கொரி. 10:14-22<br>லூக்கா 22:7-20<br>சங்கீதம் 42 | திருவிருந்து எனும் சாக்கிரமந்து<br>Sacrament of Holy Communion |